தொழில் துறை
தபால்
5208
17 MAY 2022
சென்னை-600 009
தலைமைச் செயலகம்

<u>சுருக்கம்</u>

தொழில் துறை – சிப்காட் – நில எடுப்பு – தேனி மாவட்டம் மற்றும் வட்டம் – தப்புக்குண்டு, உப்பார்பட்டி மற்றும் பூமலைக்குண்டு கிராமங்கள் – 1.94.57 ஹெக்டேர் பட்டா நிலங்கள் நில எடுப்பு – 0.03.50 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்கள் நில உரிமை மாற்றம் – மொத்தம் 1.98.07 ஹெக்டேர் (4.89 ஏக்கர்) நிலங்கள் – புதிய சிப்காட் உணவுப் பூங்காவிற்கு பாதை வசதி – தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)-ன்படி/தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்துவது – நிர்வாக அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>தொழில் (சிப்காட்– நி.எ) துறை</u>

அரசாணை (நிலை) எண்.99

நாள்: 13.5.2022
சுபகிருது வருடம், சித்திரை 30,
திருவள்ளுவர் ஆண்டு – 2053

படிக்க:

1) தேனி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.34204/2020/ஆ2, நாள் 20.12.2021 மற்றும் 2.2.2022.
2) நில நிர்வாக ஆணையரின் கடித எண்.எச்1/1828236/2021, நாள் 09.02.2022

******

<u>ஆணை:</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தேனி மாவட்டத்தில் புதிய சிப்காட் உணவுப் பூங்கா அமைக்கும் பொருட்டு, தப்புக்குண்டு, உப்பார்பட்டி மற்றும் பூமலைக்குண்டு கிராமங்களில் 467.79 ஏக்கர் பரப்பிலான அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது என்றும், இந்நிலையில் மேற்கண்ட உணவுப் பூங்காவிற்கு பாதை வசதி சரிவர இல்லை என்பதால், தேவையான அணுகு சாலை அமைப்பதற்கு 0.03.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு மற்றும் 1.94.57 ஹெக்டேர் பட்டா நிலங்கள் ஆக மொத்தம் 1.98.07 ஹெக்டேர் (4.89 ஏக்கர்) நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)–ன் மூலம் கையகப்படுத்த தேனி மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதி கோரியுள்ளார்.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தேனி மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, தேனி மாவட்டம் மற்றும் வட்டம், தப்புக்குண்டு, உப்பார்பட்டி மற்றும் பூமலைக்குண்டு கிராமங்களில் அமையவுள்ள புதிய சிப்காட் உணவுப் பூங்காவிற்கு பாதை வசதி ஏற்படுத்த

0.03.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு மற்றும் 1.94.57 ஹெக்டேர் பட்டா நிலங்கள் ஆக மொத்தம் 1.98.07 ஹெக்டேர் (4.89 ஏக்கர்) நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)-ன்படி/தனி நபர் பேச்சுவார்த்தை மூலம் நிர்வாக அனுமதி ஆணை வழங்கும்படி நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. புதிய சிப்காட் உணவுப் பூங்காவிற்கு பாதை வசதி ஏற்படுத்தப்படவுள்ள நிலங்களின் விவரம் மற்றும் அதன் மதிப்பு பின்வருமாறு:

| வ. எண். | புல எண். | வகைப்பாடு | பரப்பு | | நில எடுப்பு புலங்களுக்கான வழிகாட்டி பதிவேட்டின்படி நில மதிப்பு | | உத்தேச மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பட்டா | புறம்போக்கு | ஒரு ஹெக்டேருக்கு (ரூ.) | ஒரு ஏக்கருக்கு (ரூ.) | |
| கிராமம் : உப்பார்பட்டி | | | | | | | |
| 1. | 31 | ர.புஞ்சை | 0.22.50 | -- | 165490 | 67000 | 37520 |
| 2. | 53/1 | ர.புஞ்சை | 0.29.50 | --- | 165490 | 67000 | 48910 |
| 3. | 55/4B | ர.புஞ்சை | 0.20.15 | --- | 7215364 | 2921200 | 1460600 |
| 4. | 55/7B | ர.புஞ்சை | 0.10.10 | -- | 7215364 | 2921200 | 730300 |
| 5. | 59/1 | ர.புஞ்சை | 0.43.00 | --- | 165490 | 67000 | 71020 |
| 6. | 55/1A | ச.புஞ்சை | -- | 0.03.50 | 0 | 0 | 0 |
| | | மொத்தம் (அ) | 1.25.25 | 0.03.50 | | | **23,48,350** |
| கிராமம்: தப்புக்குண்டு | | | | | | | |
| 1. | 12/1 | ர.புஞ்சை | 0.02.14 | -- | 165490 | 67000 | 3350 |
| 2. | 12/5A | ர.புஞ்சை | 0.22.68 | --- | 264784 | 107200 | 60032 |
| 3. | 13/7 | ர.புஞ்சை | 0.44.50 | --- | 165490 | 67000 | 73700 |
| | | மொத்தம் (ஆ) | 0.69.32 | | | | **137082** |
| | | | | | ஆக மொத்தம்(அ+ஆ) | | 24,85,432 |

4. தேனி மாவட்ட ஆட்சியரின் கோரிக்கை மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தேனி மாவட்டம் மற்றும் வட்டம், தப்புக்குண்டு, உப்பார்பட்டி மற்றும் பூமலைக்குண்டு கிராமங்களில் அமையவுள்ள புதிய சிப்காட் உணவுப் பூங்காவிற்கு பாதை வசதி ஏற்படுத்த மேற்காணும் 1.94.57 ஹெக்டேர் பட்டா புலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)-ன்படி/தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நிலஎடுப்பு செய்யவும், 0.03.50 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை நிலஉரிமை மாற்றம் செய்திடவும், ஆக மொத்தம் 1.98.07 ஹெக்டேர் (4.89 ஏக்கர்) நிலங்களை

கையகப்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. நில எடுப்பு மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக மொத்தம் ரூ.28,45,820/- தொகையினை சிப்காட் நிறுவனம் ஒப்பளிப்பு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலும், நிலமதிப்பு கணக்கீடு செய்யப்படும்பொழுது அரசாணை (நிலை) எண்.29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24.01.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.411, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 06.08.2020-இல் உள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறு தேனி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:

நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

மேலாண்மை இயக்குநர்,
சிப்காட்,
19-A, ருக்மணி லக்ஷ்மிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை - 600 008.

மாவட்ட ஆட்சியர்,
தேனி மாவட்டம்.

சிறப்பு வட்டாட்சியர் (நிஎ),
சிப்காட் தேனி திட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
தேனி மாவட்டம்.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
தொழில் (அ.ந.மு.II/ஜிஜஎம்) துறை, சென்னை - 600 009.
இ.கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

13.5.2022

பிரிவு அலுவலர்

13/5/2022